அகத்தியர் துணை

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

## தொகுத்தவர்

கல்கி அவதாரமாகிய மோனநிலைகண்ட உலகப்பேராசான், சிவராஜயோகி,
ராஜரிஷி, குருநாதர், தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,**
ஓங்காரக்குடில், துறையூர் – 621 010. ✆455684
7–ஆவது வெளியீடு – 22.09.2002 தீட்சை விழா

அகத்தியர் துணை

## மகான் சினேந்திர மாமுனிவர்

அவர்களின் அறிவுரையின்படி நாம் நமது கருத்துக்களை சொல்லுவதில் குற்றமில்லை. ஆனால், மற்றவற்றைப் பற்றி குறைகூறுவது ஆன்மீகத்திற்கு அழகல்ல என்று சொல்லியதால் 6–ஆம் வெளியீடான சித்தர்கள் போற்றித் தொகுப்பில் சில பகுதிகள் நீக்கிவிட்டோம். மேலும், 7–ஆம் வெளியீட்டில் சில மாற்றங்கள் செய்து வெளியிட்டிருக்கின்றோம் என்பதை அன்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இந்நூலில் பிழை திருத்தம் செய்து வெளியிட உதவிய அன்பர் இரா. மாதவன் அவர்களை மனமார வாழ்த்துகிறேன்.

நல்லாசியுடன்,
**ஓங்காரக்குடிலாசான்.**

## குருநாதர் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்கள் அருளிய இவ் அரிய நூலின் சிறப்புகள்

தெய்விகமான இந்த நூலை கையில் எடுத்து படிக்கும்போது எல்லா ஞானியர்களும் நம்மை சூழ்ந்துகொண்டு ஆசி வழங்குவார்கள். அதன் காரணமாக நமக்கு ஏற்பட்டுள்ள கடன் சுமை தீரும். செல்வநிலை பெருகும். உடல் ஆரோக்கியமும் உண்டாகும். நல்ல பண்புள்ள புத்திர பாக்கியம் அமையும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். முன்செய்த வினையின் காரணமாக நமக்கு ஏதேனும் துன்பம் வந்தால் அது முன்செய்த வினைதான் என்று உணர்வாரே தவிர,

அண்ணன் செய்வினை செய்துவிட்டான், தம்பி செய்வினை செய்து விட்டான் அல்லது நண்பன் செய்வினை செய்துவிட்டான் என்று யாரேனும் சொன்னால் அதை நம்பமாட்டார்கள். தாம் செய்த பாவம் என்று எண்ணுவார்கள்.

ஞானியர்களின் ஆசி இருப்பதால் எதையும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்கும் சிறப்பறிவு உண்டாகும். எந்த துன்பத்தையும் கண்டு அஞ்சமாட்டார்கள். காரணம் ஞானியர்களின் ஆசி இருப்பதால். மேலும் இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்தால் எவருடைய சூழ்ச்சிக்கும், வஞ்சகத்திற்கும் ஆட்படமாட்டார்கள்.

பண்புள்ள நட்பு பெருகும். பண்பற்ற நட்பு ஒரு காலத்தில் அமைய நேர்ந்தால் அதன் போக்கில் சென்று கை நழுவ விட்டு விடுவார்கள். எல்லா வகையான சிறந்த குணப்பண்புகளும் அமையும்.

மேலும் தம்முடைய துன்பம் தீருவதற்காக சிறுதெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுப்பதை பாவம் என்று எண்ணுவார்கள். இறையருள் பெறுவதற்கும் மெய் ஞானம் சித்தி அடைவதற்கும் "**ஓம் அகத்தீசாய நம**" என்று சொல்லும் நாமஜெபம் ஒன்றுதான் முக்கியமானது என்று அறிவார்கள். மற்ற சடங்குகள் எல்லாம் வீண் ஆரவாரத்தன்மை என்றும் அறிவார்கள். மேலும் உலகத்திலுள்ள ஆன்மீகவாதிகளை இவன் உண்மையானவனா? அல்லது பொருள் வெறியனா? காமுகனா? என்று அறிகின்ற அறிவே மிகச்சிறந்த அறிவாகும்.

உண்மையான ஆன்மீகவாதி என்றால் அவர் துணைகொண்டு ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் உண்டாகும்.

மற்ற இல்லறத்தார்கள்போல் போலி ஆன்மீகவாதிகளிடம் சென்று பொருளையும், காலத்தையும் வீண் செய்யமாட்டார்கள். உலகத்திலுள்ள நன்மை, தீமை அறிந்து கொள்ளுதலும் மேலும் நண்பர் யார்? பகைவர் யார்? என்று அறிகின்ற சிறப்பறிவும் உண்டாகும். மேலும் பெற்ற தாய், தந்தையிடம் அன்பு காட்டுதலும், மனைவியை மதித்தலும், அவருக்கு துணையாக இருத்தலும், பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளை செய்தலும், விருந்தை உபசரித்து நட்பை பெருக்குதலும் ஆகிய எல்லாவகையான குணப்பண்புகளும் ஆசான் அகத்தீசன் ஆசியால் பெறமுடியும்.

மேலும் ஏழைகளுக்குப் பசியாற்றுவிப்பதே தலைசிறந்த கொள்கை என்று அறிதலும், மெய்ஞானம் அடைய நெடுங்காலம் ஆகும் என்றும், அவசரப்படுவது அறியாமை என்றும் அறிவார்கள்.

ஆகவே, இந்த அரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பு நூல் மனித வர்க்கத்திற்கு ஒரு ஞான பொக்கிஷமாகும். இதுவே ஞான வாழ்வுக்கு ஒரு சிறந்த வழிகாட்டு நூல் என்று எண்ணி போற்றப்பட வேண்டும்.

பாரி லுயர்ந்தது பக்தி– அதை
　　பற்றின பேர்க்குண்டு மேவருமுத்தி
சீரி லுயரட்ட சித்தி – யார்க்குஞ்
　　சித்திக்கு மேசிவன் செயலினால் பக்தி

- **கடுவெளிச்சித்தர்.**

## மேற்கண்ட கடுவெளிச்சித்தர் பாடலின் சாரம்

உலகத்தில் ஒருசிலர் யோகாப்பியாசமாகிய யோகப்பயிற்சி செய்தால் கடவுளை அடையலாம் என்று எண்ணுவார்கள். ஒருசிலர் செந்தூரம், சுண்ணம், பஸ்பம், லேகியம் மற்றும் பல்வேறு வகையான மூலிகைகளை சாப்பிட்டால் காயசித்தி பெற்று ஞானம் பெறலாம் என்று நினைப்பார்கள். ஒருசிலர் மட்டும் நவகோடி சித்தர்களுக்குத் தலைவரும் குருமுனி பட்டம் பெற்ற அகத்தீசரை உருகி தியானம் செய்தால் பாவங்கள் நீங்கி, புண்ணியம் பெருகும் என்றும், ஆன்மாவைப் பற்றியும், ஆன்மா ஏன் மாசுபட்டது என்பதை அறிந்தும், ஆன்மா மாசு நீங்கினால் ஆன்மஜோதி தோன்றும் என்றும், அதுவே மரணமில்லாப் பெருவாழ்வு கைகூடும் என்றும் அறிந்து ஆசான் அகத்தீசனை தாயாகவும் தந்தையாகவும், குருவாகவும், குறைதீர்க்கும் குலதெய்வமாகவும் எண்ணி பூஜிப்பார்கள். இவர்களே பெரும்பேறு பெற்றவர் ஆவார்கள். இவர்கள் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் செய்யும் வல்லவர் ஆவார்கள். பக்தியே யோகமும், ஞானமும் சித்திக்கும்.

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே.

**–திருமந்திரம் –138.**

இந்த நூலிலுள்ள சித்தர்கள் போற்றித் தொகுப்பை காலை, மாலை பயபக்தியுடன் பாராயணம் செய்துவந்தால் அவரவர்களுக்குள்ள எல்லாத் துன்பங்களும் நீங்கி பல நன்மைகளும் பெறுவார்கள். இதைவிட மேம்பட்ட பக்தி இருப்பதாகத் தெரியவில்லை. இதுவே மரணமிலாப் பெருவாழ்வுக்கு உற்ற துணையாகும். தெய்விகமான சித்தர்கள் போற்றித் தொகுப்பாகிய இந்த நூலை (சட்டை பாக்கெட்டில்) சட்டை பையில் வைத்துக்கொண்டு எங்கு சென்றாலும் பகைவர்களால் இடையூறு வராது. துஷ்ட தேவதைகளாலும், துஷ்ட ஐந்துக்களாலும் இடையூறு வராது. நினைத்த காரியம் கைகூடும்.

தினமும் காலையில் "**ஓம் அகத்தீசாய நம**" என்று 108 முறை நாமஜெபம் செய்தால் நாம் செய்யக்கூடிய செயல்களில் நன்மை (புண்ணிம்), தீமை (பாவம்) அறிய முடியும். நமது செயல்களில் பாவபுண்ணியத்தை அறிவதே அறிவாகும். பாவத்தை நீக்கி புண்ணியத்தை பெருக்குவதே சிறப்பறிவாகும். புண்ணியம் பெருகப் பெருக ஆன்மாவைப் பற்றி அறியக்கூடிய அறிவு உண்டாகும். புண்ணிய பலத்தாலும், ஆசான் அகத்தீசன் ஆசியாலும் ஆன்மா மும்மலமென்னும் (மல, ஜல, சுக்கிலம்) சிறையில் அகப்பட்ட விவரம் அறியமுடியும்.

மேலும் மேலும் புண்ணியமும், அருள்பலமும் இருந்தால் சிறைபட்ட ஆன்மாவை விடுவிக்கக்கூடிய ஆசி கிடைக்கும். விடுவிக்கப்பட்ட ஜீவான்மா பரமான்மாவோடு இரண்டறக் கலக்கும். அதுவே ஆன்ம ஜோதி (அருட்பெருஞ்ஜோதி) யாக மாறும். இவ்வரிய வாய்ப்பைப் பெற்ற மகான்களை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்பர். இவர்களே ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் செய்யும் வல்லவர்கள் ஆவார்கள்.

நமக்குப் பொருள் சேர்க்கும்போது இந்த பொருள் நெறிக்குட்பட்டு வந்ததா அல்லது நெறிக்கு உட்படாது வந்ததா என்று அறியக்கூடிய அறிவும், நெறிக்குட்பட்டு வந்த பொருள்தான் என்றால் அப்பொருள் தனக்கும் தன்சந்ததிக்கும் பயன்படும். நெறிக்குட்படாத பொருள் என்றால் அப்பொருள் தனக்கும் தன் சந்ததிகளுக்கும் பல துன்பங்களைத் தந்து கைநழுவிப் போகும். இதை அறிந்து கொள்வதற்கும் ஆசான் அகத்தீசன் ஆசி வேண்டும். எனவே நாம் "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்து ஆசான் அகத்தீசன் ஆசியை பெற்றுக்கொள்ளவேண்டும்.

தானமும் தவமும் தான்செய்வாராகில்
வானவர் நாடு வழிதிறந்திடுமே

**–ஔவையார்**

ஏழைகளுக்கு பசியாற்றுவித்தல், ஏழைகளுக்கு ஆடை வழங்குதல், நோயுற்றவருக்கு மருத்துவம் செய்தல், கல்விக்கு உதவி செய்தல், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று பாராது சமநோக்கோடு அன்பு காட்டுதல் மற்றவர்களை மதித்தலும், மனம் விட்டுப்பழகுதலும், மலர்ந்த முகத்தோடு மனம் பொருந்திய இன்சொற்களும், தம்மால் முடிந்த அளவுக்கு பிற உயிர்களுக்கு மகிழ்ச்சியானவற்றைச் செய்தலும், நாம் அறிந்த உண்மைப்பொருளை மற்றவருக்கு மனதில் பதியும் வண்ணம் சொல்லுதலும் ஆகிய அனைத்தும் தானத்தைச் சேர்ந்ததாகும்.

தியானம் என்பது முற்றுப்பெற்ற முனிவரும் யுகயுகமாக இருந்து அன்பர்களுடைய துன்பத்தை நீக்கக் கூடியவரும், குருமுனிவர் என்னும் பட்டம்பெற்ற அகத்தீசன் திருவடியைப் பற்றி பூஜிப்பதும், அவர் நாமத்தைச் சொல்லி நாமஜெபம் செய்வதும் ஆகியவையே தியானமாகும்.

**குறிப்பு : "ஓம் அகத்தீசாய நம"** என்று குறைந்தது 108 முறையாவது சொல்லுவது நல்லதே.

பசித்தவர்களுக்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் கணவனை மனைவி தடுத்தாலும், மனைவியைக் கணவன் தடுத்தாலும், தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும், பிள்ளைகளைத் தந்தை தடுத்தாலும், சீடனை ஆசான் தடுத்தாலும், அடியாரை ஆண்டவன் தடுத்தாலும், குடிகளை அரசன் தடுத்தாலும், அந்த தடைகளால் தளர்ச்சியடையாமல் அவரவர்கள் செய்த நன்மை தீமைகள் அவரவரை போய்ச் சேருமல்லாது வேறு இடத்துக்குப் போகாதென்பதை உண்மையாக நம்பி பசியாற்றுவிப்பதையே விரதமாக அனுசரிக்க வேண்டும் என்று நாம் அறியவேண்டும்.

ஜீவர்களைப் பசியென்கிற அபாயத்திலிருந்து நீங்கச் செய்கின்ற உத்தமர்கள் எந்த ஜாதியினராயினும், எந்த மதத்தவராயினும், எந்த கொள்கையை உடையவர்களாயினும், தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடையவர்கள் ஆவார்களென்று சர்வ சக்தியுடைய கடவுள் சாட்சியாக சத்தியம் செய்யப்படுமென்று அறிய வேண்டும். பசி நீங்க உண்டு சந்தோஷித்தவர்கள் தமக்கு உணவு கொடுத்த புண்ணியர்களைத் தெய்வமாகப் பாவிக்கிறார்களாதலால் தமக்குப் பசியாற்றுவித்த இவர்களை தெய்வமென்று உண்மையாக அறியவேண்டும்.

அன்பு பொருந்திவாழ அகத்தீசா என்று கூறுங்கள்.
ஆக்கம் பெற்றுவாழ அகத்தீசா என்று கூறுங்கள்.
இல்லறம் சிறக்க அகத்தீசா என்று கூறுங்கள்.
ஈகை குணம் பெற அகத்தீசா என்று கூறுங்கள்.
உண்மைப்பொருள் அறிய அகத்தீசா என்று கூறுங்கள்.
ஊக்கம்பெற அகத்தீசா என்று கூறுங்கள்.
எண்ணம் சித்திக்க அகத்தீசா என்று கூறுங்கள்.
ஏற்றம் பெற்றிட அகத்தீசா என்று கூறுங்கள்.
ஐயம் நீங்கிட அகத்தீசா என்று கூறுங்கள்.
ஒண்பொருள் பெற்றிட அகத்தீசா என்று கூறுங்கள்.
ஓங்காரம் கண்டிட அகத்தீசா என்று கூறுங்கள்.
ஔடதம் அறிந்திட அகத்தீசா என்று கூறுங்கள்.

இறலினும் எண்ணாது வெ..கின் விறலினும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு

**– குறள் 180.**

## மேற்கண்ட குறளின் சாரம்

பொருளைக் கண்டு மயங்காத பேரறிவே பெருமிதம் உண்டுபண்ணும். மேலும் கூற்றுவனையும் வெல்லலாம். பொருளைக்கண்டு மயங்கினால் தெருவில் செல்லும் எமனை கைத்தட்டி அழைப்பதற்கு ஒப்பாகும்.

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

**–திருமந்திரம் 1598.**

## மேற்கண்ட கவி – 1598 ன் சாரம்

ஆசான் அகத்தீசர் திருவடியை உருகி தியானித்தலும், அவர் நாமத்தைச் சொல்லி நாமஜெபம் செய்வதும், நமது ஆன்மா மும்மலமாகிய சிறையில் அகப்பட்டது விடுவிக்கப்படும். மேலும் ஞானமும் சித்திக்கும்.

மண்மலை யத்தனை மாதனம் ஈயினும்
அண்ணல் இவனென்றே அஞ்சலி யத்தனாய்
எண்ணி யிறைஞ்சாதார்க்கு ஈந்த இருவரும்
நண்ணுவர் ஏழா நரகக் குழியிலே

**–திருமந்திரம் – 508**

ஞானத்திற்கு தலைவர் ஆசான் அகத்தீசர்தான் என்று அறிந்து பூஜை செய்யாத ஆன்மிகவாதிகளுக்கு இல்லறத்தார்கள் பொருள் தந்தால் பொருளைக் கொடுப்பவருக்கும் நரகம், பொருள் பெறுபவருக்கும் நரகம்.

சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு ஒன்றில்லை
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு காட்டும்
குருவை வழிபடின் கூடலு மாமே

**–திருமந்திரம் – 2119.**

அநேக கோடி மக்கள் சிவனை பூஜை செய்கிறார்கள். ஆனால் சிவன் யாரென்று அறிந்து பூஜை செய்யாததால் பெறக்கூடிய ஆன்மலாபம் பெறமுடியாமல் போகிறார்கள். ஆசான் அகத்தீசன்தான் சிவபெருமான் என்று அறிந்து பூஜை செய்தால் எல்லா நன்மைகளையும் பெறலாம். மேலும் ஞானமும் சித்திக்கும், மரணமில்லாப் பெருவாழ்வு பெறலாம்.

பெருமான் இவனென்று பேசி யிருக்குந்
திருமானிடர் பின்னைத் தேவரு மாவர்
வருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யும்
அருமா தவத்தெங்கள் ஆதிப் பிரானே.

**–திருமந்திரம் கவி –303.**

பெருமைக்குரிய தலைவர் ஆசான் அகத்தீசரை புகழ்ந்து பேசினால் சாதாரண மனிதர்களும் உயர்ந்த மனிதராவர். அது மட்டுமல்லாது ஆசான் அகத்தீசரை பூஜித்தும், தூய மனதோடு புகழ்ந்தும் பேசினால் ஞானியும் ஆவார். ஆசான் அகத்தீசரை புகழ்ந்து பேசுகின்றவர்களுக்கும் அருள் செய்வார். பேச்சை கேட்டு அகத்தீசரை பூஜிப்பவர்களுக்கும் அருள் செய்வார். எனவே தூய மனதோடு புகழ்ந்து பேசினால் பேசுகின்றவர் ஞானியாவார் என்பது சத்தியம்.

இறையடி தாழ்ந்துஐ வணக்கமும் எய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்
சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோடு
**அறிவுக்கு அறிவிப்போன் சன்மார்க்கி யாமே.**

**– திருமந்திரம் 1701.**

அகத்திய மாரிஷி நமா என்றென்றோது
அஷ்ட சித்துதனை ஈவார் குளிகை ஈவார்
அகத்தியரே காஷாய வேட மீவார்
அப்போது சித்தரெல்லாம் கைக் கொள்வார்கள்
அகத்தியரைத் தெண்டனிட்டு மேரு செல்ல
யாருக்கும் தடையில்லை அரசே யென்பார்
அகத்தியர் தாம் எக்கியத்தில் பிறந்த யோகி
ஆயிரத்தெட்டு அண்டமெல்லாம் ஆணையாச்சே.

**–கொங்கணர் கடைக்காண்டம் 500 ல் 76.**

## மேற்கண்ட கொங்கண மகரிஷி கவியின் சாரம்

உலகத்தில் ஆன்மீகவாதிகள் சிலர் ஞானவாழ்வு பெற விரும்புவார்கள். அதற்கு பலவகையில் பக்தி நெறியைக் கடைபிடிப்பார்கள். நவகோடி சித்தர்களுக்குத் தலைவரும், குருமுனி, கும்பமுனி என்று பட்டம் பெற்றவருமான ஆசான் அகத்தீசரை பூஜை செய்தால்தான் ஞானம் சித்திக்கும் என்பதை அறியமாட்டார்கள். காரணம், அவர்களின் வினைக் குறையே. நல்வினை உள்ளவர்கள் மட்டும் ஆசான் அகத்தீசர்தான் பரப்பிரம்ம சொரூபி என்றும், நமது பாவத்தை எல்லாம் பொடியாக்கக்கூடிய வல்லவர் என்றும் அறிந்து கொள்வார்கள்.

ஆசான் அகத்தீசனை காலை மாலை **"ஓம் அகத்தீசாய நம"** என்று நாமஜெபம் செய்து நீரே பெரியோர் என்றும், என் குறைகளை எல்லாம் நீக்கும் வல்லவர் என்றும், என் அகமும் புறமும் இருந்து எனக்கு உண்மையை உணர்த்தக்கூடிய பெருந்தகை என்றும், வணங்கி பூஜித்து ஆசி பெறுவார்கள். அவர்களுக்குத்தான் ஆசான் அகத்தீசர் காவி உடை தந்து ஆசி தருவார். மேலும் ஆசான் அகத்தீசர் காவி உடை தந்த பின் எல்லா ஞானிகளும் சூழ்ந்து, காவி உடை பெற்றவர்களுக்கு அருள் செய்வார்கள். ஞான வாழ்வை ஆசான் அகத்தீசர் அன்றி வேறுயாரும் தருவதற்கு அதிகாரம் இல்லை. உலகத்தில் சித்திபெற்ற அத்தனை ஞானிகளும், அகத்தீசன் ஆசி பெற்றவர்களே ஆவார்கள். அகத்தீசர் ஆணையிடாமல் உலகத்தின் எந்த ஞானிகளும் நமக்கு அருள் செய்யமாட்டார்கள். எனவே, அகத்தீசரை பூஜித்தும், அவர் ஆசி பெற்ற அனைத்து ஞானிகளின் ஆசியையும் பெற்று ஞானம் பெற்று வாழ்வோம்.

காப்பான கருவூரார் போகநாதர்
கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர்
மூப்பான கொங்கணரும் பிரம்மச்சித்தர்
முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர்
கோப்பான கோரக்கர் பதஞ்சலியார்
கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்
வாப்பான வாதத்திற்கு ஆதியான
வாசமுனி கமலமுனி காப்புதானே.

**–ரோமரிஷி பூஜாவிதி 7ல் கவி–2.**

## மேற்கண்ட கவியின் சாரம்

கருவூரார், போகநாதர், அகத்தீசர், சட்டைமுனி, கொங்கணர், பிரம்மமுனி, மச்சமுனி, நந்தீசர், கோரக்கர், பதஞ்சலியார், இடைக்காடர், சண்டிகேசர், தூர்வாசர், கமலமுனி.

மகான் ரோமரிஷி கருணைகொண்டு அருளிய இந்த காப்புச் செய்யுளில் மேற்கண்ட 14 மகான்களும் எமனை பலகாரமாகச் செய்து விழுங்கியவர்கள். இவர்களின் நாமத்தைச் சொல்லி பூஜித்தால் கொடிய புற்றுநோய், தொழுநோய் இன்னும் கணக்கிலடங்கா பல நோய்களும் நீங்கிவிடும். நமது கையால் விபூதி கொடுத்தால், விபூதி பெறுபவர்களுக்கு எல்லா நோய்களும் நீங்கிவிடும். மேலும் நமக்கு அளவில்லா பெரும் சக்தியும் கிடைக்கும். ஞானமும் கைகூடும், மரணமில்லாப் பெருவாழ்வும் பெறலாம். நம்மைச் சார்ந்திருப்பவர்களுக்கும் பாவங்கள் நீங்கி புண்ணியம் பெருகும்.

நெஞ்சார நினைப்பவர்க்கு நிழல் ஆவானை
நீங்காதார் குலம் தழைக்க நிதியாவானைச்
செஞ்சாலி வயற்பொழில்சூழ் தில்லை மூதூர்ச்
சிலம்பொலி போல் பாடுகின்ற சித்தன் தன்னை
வெஞ்சாபமுமில்லை ஒரு வினையுமில்லை
வேலுண்டு துணைவருங்கால் வெற்றியுண்டாம்
அஞ்சாதீர் என்று யுகயுகத்தும் தோன்றும்
அகத்தியனை அருட்குருவை அகத்துள் வைப்பாம்.

- **தனிப்பாடல்.**

## மேற்கண்ட கவியின் சாரம்

ஆசான் அகத்தீசரை மனமார பூஜை செய்கிறவர்களுக்கு குளிர்ச்சி பொருந்திய நிழலுமாவார். அதுமட்டுமல்ல நமது வறுமையையும் தீர்த்து மேலும் நமது சந்ததியர்களுக்கு செல்வநிலை பெருகச்செய்வார். தில்லைவாழ் அம்பலவாணர் கால் சிலம்பொலி போல் கனீர், கனீர் என்று பாடலும் பாடியுள்ளார். அகத்தீசரை தொடர்ந்து பூஜை செய்தால் சாபங்களும், பாவங்களும் நீங்கும். மேலும் ஞானபண்டிதரின் வேல் படையும் துணை நிற்கும். எனவே, நாம் ஆசான் அகத்தீசரை பூஜித்து ஆசி பெறுவோமாக.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

- **திருமந்திரம் 1598.**

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று உலகறியச்செய்த வள்ளல், குருநாதர் தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்கள் தொகுத்து வழங்கிய

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி
ஓம் அகப்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் அசுவினித்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் அத்திரி மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் அநுமான் திருவடிகள் போற்றி
ஓம் அம்பிகானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் அருணகிரிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் அருள்நந்திசிவாச்சாரியார் திருவடிகள் போற்றி
ஓம் அல்லமாபிரபு திருவடிகள் போற்றி
ஓம் அழுகண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி 10

ஓம் இடைக்காடர் திருவடிகள் போற்றி
ஓம் இராமலிங்கசுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் இராமதேவர் திருவடிகள் போற்றி
ஓம் இராமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் உமாபதி சிவாச்சாரியார் திருவடிகள் போற்றி
ஓம் ஔவையார் திருவடிகள் போற்றி
ஓம் கஞ்சமலைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கடைப்பிள்ளைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கடுவெளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கண்ணானந்தர் திருவடிகள் போற்றி 20

ஓம் கண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கணநாதர் திருவடிகள் போற்றி
ஓம் கணபதிதாசர் திருவடிகள் போற்றி
ஓம் கதம்பமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் கபிலர் திருவடிகள் போற்றி
ஓம் கமலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கருவூர்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் கல்லுளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கலைக்கோட்டு முனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கவுபாலச்சித்தர் திருவடிகள் போற்றி 30

ஓம் கணராமர் திருவடிகள் போற்றி
ஓம் காகபுஜண்டர் திருவடிகள் போற்றி
ஓம் காசிபர் திருவடிகள் போற்றி
ஓம் காலாங்கிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் குகைநமச்சிவாயர் திருவடிகள் போற்றி
ஓம் குதம்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் குமரகுருபரர் திருவடிகள் போற்றி
ஓம் குருதட்சணாமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் குருராஜர் திருவடிகள் போற்றி
ஓம் குறும்பைச்சித்தர் திருவடிகள் போற்றி 40

ஓம் கூர்மானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் கொங்கணேஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் கோரக்கர் திருவடிகள் போற்றி
ஓம் கௌசிகர் திருவடிகள் போற்றி
ஓம் கௌதமர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கமுனிச் சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கர மகரிஷி திருவடிகள் போற்றி

ஓம் சங்கிலிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சச்சிதானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சட்டநாதர் திருவடிகள் போற்றி 50

ஓம் சண்டிகேசர் திருவடிகள் போற்றி
ஓம் சத்யானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சிவயோகமாமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சிவவாக்கியர் திருவடிகள் போற்றி
ஓம் சிவானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுகப்பிரம்மர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் சூதமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சூரியானந்தர் திருவடிகள் போற்றி 60

ஓம் சூலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சேதுமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சொரூபானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் ஜம்பு மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் ஜமதக்னி திருவடிகள் போற்றி
ஓம் ஜனகர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனந்தனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனாதனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனக்குமாரர் திருவடிகள் போற்றி
ஓம் ஜெகநாதர் திருவடிகள் போற்றி 70

ஓம் ஜெயமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் ஞானச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் டமாரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் தன்வந்திரி திருவடிகள் போற்றி
ஓம் தாயுமான சுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருகோணச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருஞானசம்பந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி
ஓம் திருமாளிகை தேவர் திருவடிகள் போற்றி 80

ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி
ஓம் திருவள்ளுவர் திருவடிகள் போற்றி
ஓம் தூர்வாசமுனிவர் திருவடிகள் போற்றி

ஓம் தேரையர் திருவடிகள் போற்றி
ஓம் நந்தனார் திருவடிகள் போற்றி
ஓம் நந்தீஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் நாதாந்தசித்தர் திருவடிகள் போற்றி
ஓம் நாரதர் திருவடிகள் போற்றி
ஓம் நொண்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பட்டினத்தார் திருவடிகள் போற்றி 90

ஓம் பத்ரகிரியார் திருவடிகள் போற்றி
ஓம் பதஞ்சலியார் திருவடிகள் போற்றி
ஓம் பரத்துவாசர் திருவடிகள் போற்றி
ஓம் பரமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் பராசரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பாம்பாட்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பிங்களமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் பிடிநாகீசர் திருவடிகள் போற்றி
ஓம் பிருகுமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பிரும்மமுனிவர் திருவடிகள் போற்றி 100

ஓம் பிர்முகமது திருவடிகள் போற்றி
ஓம் புண்ணாக்கீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலத்தீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலிப்பாணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பூனைக்கண்ணார் திருவடிகள் போற்றி
ஓம் போகமகாரிஷி திருவடிகள் போற்றி
ஓம் மச்சமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் மஸ்தான் திருவடிகள் போற்றி
ஓம் மயூரேசர் திருவடிகள் போற்றி
ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி 110

ஓம் மார்க்கண்டேயர் திருவடிகள் போற்றி
ஓம் மாலாங்கன் திருவடிகள் போற்றி
ஓம் மிருகண்டரிஷி திருவடிகள் போற்றி
ஓம் முத்தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் மெய்கண்டதேவர் திருவடிகள் போற்றி
ஓம் மௌனசித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யாகோபு திருவடிகள் போற்றி
ஓம் யூகிமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் யோகச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யோகானந்தர் திருவடிகள் போற்றி 120

ஓம் ரோமரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வசிஷ்டமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரதரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வராகிமிகி திருவடிகள் போற்றி
ஓம் வால்மீகி திருவடிகள் போற்றி
ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131

ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள் திருவடிகள் போற்றி போற்றி

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

**–திருமந்திரம்.**

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கையும் ஆராய்ந்து அறிந்துதான் ஆன்மலாபம் அடையமுடியும் என்று நினைப்பதைவிட ஆசான் அகத்தீசரை "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்து அடியேனுக்கு ஞானம் சித்திக்க வேண்டுமென்றும் அதற்குரிய அறிவும், பரிபக்குவமும் வேண்டுமென்றும் தினந்தினமும் உருகி தியானம் செய்கிறவர்கள் ஞானியாவார்கள்.

தத்துவம் தொன்னூற்று ஆறையும் விடாது படித்து மனப்பாடம் செய்து அதன் நுட்பத்தை அறிவதைவிட தினந்தினமும் குருமுனியாகிய ஆசான் அகத்தீசரை பூஜை செய்தால் தத்துவம் தொன்னூற்று ஆறும் தானே புலப்படும். ஞானத்திற்குரிய அறிவும் உணர்த்தப்படும்.

அதுமட்டுமல்ல யோகம் செய்து அதன் மூலமாக தன் உடம்பை கெடுத்துக்கொண்டு குடல்புண் வந்து கை, கால்கள் வீங்கி அநியாயமாக சாகின்ற நிலைமை வராது.

நெடுநாள் இந்த உடம்போடு வாழ்வதற்காக செந்தூரம், பஸ்பம், சுண்ணம், பலவகையான மூலிகை சூரண வகைகளையும், லேகிய வகைகளையும் மூலப்புள்ளி, அமுரி என்னும் மலமும், சிறுநீரும் சாப்பிட்டு நெடுநாள் வாழப்போவதாக நினைத்து சாப்பிட்டவர்கள் எல்லாம் நோய்வாய்ப்பட்டு கொடுமையாக கை, கால்கள் வீங்கி செத்தார்களே தவிர உண்மையான கற்பத்தை அறியவில்லை.

ஒலிபடருங் குண்டலினியை உன்னியுணர் வாலெழுப்பிச்
சுழுமுனையின் தாள்திறந்து தூண்டுவது மெக்காலம்.

—பத்ரகிரியார் – 94.

என்று மகான் பத்ரகிரியார் அருளியுள்ளார்கள். ஆகவே குண்டலினி சக்தி என்பது ஆசான் அகத்தீசர் ஆசியால் வாசி (மூச்சுக்காற்று) வசப்பட்டால் அக்காற்று மூலாதாரத்தில் தங்கி பத்து வகையான நாதமும் கேட்கும். அமிழ்த பானமும் சிந்தும்.

ஆசான் அகத்தீசன் ஆசியால் சிற்றின்பத்திற்கு காரணமாக இருக்கின்ற உடம்பே பேரின்பத்திற்கும் காரணமாக அமைகிறது என்பதை அறிந்த அன்றே மனிதன் கடவுளாகிறான். விந்துவிட்டால் நொந்துவிடுவான் என்று யோகிகளுக்குச் சொன்ன கருத்தை இல்லறத்தார்கள் இதை அறியாது மனைவியிடம் கூடினால் விந்து விரயமாகும் என்று எண்ணி உடலுறவு கொள்ளமாட்டார்கள். இதனால் உடம்பில் அசுத்தம் தங்கி உடம்பு கெட்டுவிடும் என்பதை குருகுலவாசம் செய்பவர்கள் அறிந்துகொள்வார்கள். மற்றவர்களுக்கு இந்த ரகசியம் புரியாது.

எல்லாம்வல்ல இயற்கை கடவுள் உயிரினங்களைப் படைக்கும் போதே ஆணும், பெண்ணுமாக சேர்த்துதான் படைத்துள்ளது. ஆகவே இயற்கையோடு பொருந்தி இல்லறம் நடத்தியும், தினந்தோறும் தியானம் செய்தும் உயிரைப்பற்றியுள்ள மும்மலமென்னும் (மல, ஜல, சுக்கிலம்) இரும்புக் கோட்டையை ஆசான் அகத்தீசர் துணைகொண்டு தகர்த்தெறிந்து வெற்றி காண்பார்கள்.

பெறுதற்கரிய மானுடப் பிறவி பெற்றவர்கள் அடையக்கூடிய ஆன்ம லாபத்தை அடையாது வீண்ஆரவாரம் செய்யும் போலி ஆன்மீகவாதிகளிடம் சென்று, பொருளையும் தன்காலத்தையும் வீண் செய்து போலி ஆன்மீகவாதிகள் ஆக்கம் பெற காரணமாயிருந்து அவனையும் நரகத்துக்குத் தள்ளுகிறான். தானும் நரகத்துக்குச் செல்கிறான்.

## ஆசான் அகத்தீசன் ஆசியால் வரும் நன்மைகள்

பெறுதற்கரிய மானுட தேகம் பெற்ற நாம் அடைய வேண்டிய ஆன்மலாபத்தை நாம் இளமை உள்ளபோதே தக்க ஆசானை நாடி அவர்களின் உபதேசம் பெற்று ஆசான் அகத்தீசனை குறித்து தியானம் செய்ய வேண்டும். பிறகு நம்மால் முடிந்த அளவிற்கு ஏழைகளுக்கு பசியாற்ற வேண்டும். ஆசான் அகத்தீசனை தியானம் செய்வதால் அருள்பலம் உண்டாகும். அன்னதானம் செய்வதால் புண்ணிய பலம் சேரும். புண்ணிய பலமும், அருள் பலமும் சேரச்சேர முன்செய்த வினைகள் நீங்கும்.

முன்செய்த வினைகள் நீங்கினால் பொல்லாத வறுமை நீங்கும். உடல் ஆரோக்கியமும் ஏற்படும். நீடிய ஆயுளும் உண்டாகும். ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய சிறப்பறிவு வரும். அநித்தியத்தையும், நித்தியத்தையும் அறியக்கூடிய மெய்யுணர்வு ஏற்படும். தகுதியுள்ள நட்பு ஏற்படும். நல்வினை எது, தீவனை எது என்று அறிந்து நல்வினையை பெருக்கிக்கொள்ள ஆசான் அகத்தீசன் துணை இருப்பார். அறியாமை காரணமாக நாம் பிறருக்கு இடையூறு செய்ய முற்படும் போதெல்லாம் தடுத்து ஆட்கொள்வார் அகத்தீசர். நமக்கு யாரேனும் இடையூறு செய்ய முற்பட்டால் அதையும் தடுத்து காப்பாற்றுவார். மேலும் பகைமை இல்லாத பெருவாழ்வும் தருவார் அகத்தீசர். நாம் மேற்கொள்ளும் தொழில், விவசாயம், வியாபாரம், உத்யோகம் இதில் தடையில்லாமல் எல்லாம் வெற்றி பெறவும் செய்வார். எந்த வகையிலும் நாம் கவலைபடும்படியாக எந்த சூழ்நிலையும் நமக்கு ஏற்படாமல் அரண் போன்று இருந்து உதவி செய்வார். மேலும் மேலும் ஆசான் அகத்தீசனை பூஜை செய்தால் தொடர்ந்து வருகின்ற பிறவியை பற்றி அறிய செய்து பிறப்பில்லா பெரும்பேறையும் தருவார்.

எனவே "**ஓம் அகத்தீசாய நம**" என்று காலையும், மாலையும் 10 நிமிடம் நாமஜெபம் செய்யவேண்டும். இதுவே நாம் பெற்ற மானுட பிறவியை தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளும் மார்க்கமாகும்.

## பொது இடங்களில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்

ஆசான் அகத்தீசன் ஆசிபெற வேண்டுமென்றால் பொது சுகாதாரக்கேடு ஏற்படும்படி கண்ட இடங்களில் மல, ஜல கழித்தல், காரி உமிழ்தல், பலபேர்கள் கூடியிருக்கக்கூடிய இடத்தில் புகைப்பிடித்தல் போன்ற விரும்பதகாத செயல்கள் செய்யக் கூடாது. மேலும் சாலையில் செல்லும்பொழுது கண்ணாடிகளோ, கற்களோ, வாழைப்பழத்தோலோ, முள்ளோ, ஆணியோ கிடந்தால் அப்புறப்படுத்துவது நல்லது. கண்ட இடங்களில் குப்பை கொட்டுதல் கூடாது. மேற்கண்ட நெறிமுறைகளைக் கடைப்பிடித்தால் ஆசான் அகத்தீசர் ஆசிபெறலாம். மேலும் பொதுஇடங்களில் நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்ளும்பொழுது அதிக சப்தம் இல்லாமல் அடக்கமாக பேசுதல் நல்லதாகும்.

பொது இடங்களில் பெண்கள் இருக்கும்பொழுது, சகோதரிகளாக நினைத்து அடக்கமாக பேசுவது அகத்தீசர் ஆசிபெறுவதற்கு மேலும் துணையாக இருக்கும்.

மேற்கண்ட அனைத்தும் ஒருவகை தானத்திற்குட்பட்டதாகும்.

## வீட்டில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்

தினமும் கழிவறையை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் குளியல் அறையில் பாசான் பிடித்திருந்தால் பிளீச்சிங் பவுடர் தூவிவிட்டு சிறிதுநேரம் வைத்திருந்து கழுவினால் பாசான் போய்விடும். வீட்டுக்கூரையில் ஒட்டடை பிடிக்காமல் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். துணிகளைத் துவைத்து மடித்து வைப்பது நல்லது.

உணவுப்பொருட்கள் சமைத்தால் வீட்டில் உள்ளவர்களை அறிந்து கணக்காக சமைக்கவேண்டும். சமைத்த உணவுப்பொருட்கள் மிகுதியாக இருந்தால் அக்கம் பக்கம் உள்ள ஏழைகளுக்கு கொடுத்து உதவவேண்டும். அதிகமாக சமைத்து உணவுப்பொருளை வீணாக்கினால் அகத்தீசர் கோபத்திற்கு ஆளாக நேரிடும். அகத்தீசர் ஆசிபெற முடியாது.

நாம் ஒரு விருந்துக்குச் சென்றால் தேவையான அளவிற்கு மட்டும் உணவுப்பொருளை வாங்கவேண்டும். உணவுப்பொருளை இலையிலேயே வைத்துவிட்டு வந்தால் அகத்தீசர் அதிகமாக கோபம் கொள்வார். என்னால் கொடுக்கப்பட்ட உணவு வகைகளை வீண் செய்கிறாய் என்றும், கடைசி காலத்தில் உனக்கு பசித்த நேரத்தில் உணவு கிடைக்காது என்றும் மனதில் அகத்தீசர் நினைப்பார்.

நமக்கு சர்க்கரை வியாதி வராமல் இருக்கவேண்டும் என்றால் விருந்தினர்களுக்கு உணவுப்பொருள் இலையில் வைக்கும் பொழுது உங்களுக்கு எது பிடிக்கும் என்று கேட்டு அதுமட்டும் வைத்து சாப்பிடச் செய்யவேண்டும். அவர்கள் உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாத உணவுப்பொருட்கள் வைத்து அவர் சாப்பிட்டால் இலையில் வைத்துவிட்டுச்சென்றால், அதன் குற்றம் உணவுப்பொருள் பரிமாறியவர்களையேச் சாரும். இவர்களுக்கு சர்க்கரை வியாதி வருவதற்கு இதுவும் காரணம்.

நமது நாட்டில் உள்ள பெண்கள் அதிகமாக துணிகள் மீது விருப்பம் கொண்டு தேவையில்லாமல் ஆண்டுக்கு 3 அல்லது 4 அல்லது 5 விலைமதிப்புள்ள சேலைகளை வாங்கி இருப்பு வைப்பார்கள். ஆண்டுக்கு ஆண்டு சேலை வாங்கி அடுக்கிவைத்து அழகு பார்ப்பதைவிட ஏழைப்பெண்களுக்கு கொடுத்து அழகு பார்ப்பது அதைவிட சிறந்ததாகும். தேவையில்லாமல் துணிகள் நிறைய வாங்குவது பொருளாதாரத்திற்கும் கேடு. மேலும் பாதுகாப்பதும் கடினம். எனவே பெண்கள் 3 அல்லது 4 சேலைகளுக்கு மேல் இருப்பு வைத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது.

மேலும் சிலர் 100 பவுன் என்னிடம் இருக்கிறது என்றும், 200 பவுன் இருக்கிறது என்றும் பெருமை கொள்வார்கள். இதை விற்று பேங்கில் (வங்கியில்) போட்டால் 3 ஆயிரம் அல்லது 4 ஆயிரம்

வட்டியும் கிடைக்கும், பேங்கில் போட்ட தொகை நாட்டின் ஆக்கப்பணிக்கும் பயன்படும். அளவோடு நகைகள் வைத்துக்கொள்வது நல்லதே ஆகும். மேலும் பயமும் இல்லை.

**குறிப்பு**

1. நமக்கு பகையுள்ள வேண்டாதவர்கள் வரும்பொழுது காரித்துப்பக் கூடாது. அப்படி துப்பினால், அவர்கள் மனது வேதனைப்படும். அதன் காரணமாக நமக்கு ஆஸ்துமா நோய் உண்டாகும்.
2. கடவுள் ஆசி பெறுவதற்காக உண்டியலில் பெருந்தொகை போட்டு கடவுளின் ஆசிபெற நினைக்கிறார்கள் சிலர். சுத்த ஆன்மீகவாதிகளோ பசித்தவர்களுக்கு உண்டி (உணவு) கொடுத்து நாளுக்கு நாள் ஆன்மபலம் பெற்று கடவுள் ஆகிறார்கள்.
3. விதவைப் பெண்களை பார்க்கக்கூடாது என்றும் சுபகாரியங்களில் கலந்துகொள்ளக்கூடாது என்றும் சொல்வது பாவங்களிலேயே மிகப்பெரிய பாவமாகும். அவர்கள் விரும்பினால் திருமணம் செய்து வைப்பது புண்ணியமாகும்.
4. நித்ய அனுஷ்டான பூஜா விதிகளை கடைபிடித்து ஜீவகாருண்யம் இல்லை என்றால் அந்த பூஜா விதியால் யாதொரு பயனுமில்லை. ஜீவகாருண்யம் உள்ளவர்கள், நித்ய அனுஷ்டான பூஜா விதிகளை கடைபிடிக்காவிட்டாலும், அவர்களே அதிக பயனுடையவர்கள் ஆவார்கள்.

உலகத்தில் உள்ள மனித வர்க்கம் அத்தனையும் கடவுளால் படைக்கப்பட்டதாகும். படைக்கும்பொழுது எந்த வித்தியாசமும் இல்லாமல் ஒரே மாதிரியாகத்தான் படைத்துள்ளார். மனிதாபிமானம் இல்லாத, அறிவுத்தெளிவில்லாத சிலர், மனித வர்க்கத்தை பல்வேறு ஜாதிகளாக பிரித்திருக்கிறார்கள்.

பிற்காலச் சந்ததிகளோ, ஜாதிபேதத்தை உருவாக்கியவர்கள், மனிதநேயம் அற்றவர் என்றும், சிறப்பறிவு இல்லாதவர்கள்தான் செய்திருக்கிறார்கள் என்றும் உணராமல் இவர்களும் அவர்கள் பிரித்துவைத்த ஜாதி துவேசத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு சிலர் ஒருசிலரை புறக்கணிக்கிறார்கள். இது கடவுளின் சம்மதம் இல்லாத ஒரு கொடுமையாகும். மேலும், ஜாதி துவேசம் பேசுவது கடவுளின் அருள்பெற முடியாமல்போவது மட்டுமல்லாமல் நரகத்திற்கும் கொண்டுசெல்லும்.

எனவே, எல்லா மனித இனத்தையும் கடவுள் பிள்ளைகளாக எண்ணி, பாசம் செலுத்தினால் அவரே பெருந்தகையாளர்களும், கடவுளும் ஆவார்.

# திருக்குறள்

முற்றுபெற்ற முனிவரான வள்ளுவ பெருமான் எழுதிய நூலாகும். இந்த நூல் வீட்டில் இருந்தால் கடவுள் இருப்பதற்கு ஒப்பாகும். திருக்குறளை இயற்றிய வள்ளுவ பெருமான் மும்மலமாகிய பாச தேகத்தை நீத்ததால் அவரின் கருத்துக்கள் அத்தனையும் எக்காலத்திற்கும் பொருத்தமுடையதாக இருக்கும். இதுநாள் வரையிலும் தோன்றிய அறிஞர்கள் இந்த குறளின் கருத்து சரியில்லை என்றும், காலத்திற்கு ஒவ்வாது என்றும் சொன்னதில்லை. இனி எக்காலத்திலும் சொல்லுவதற்குரிய துணிச்சல் எந்த அறிஞர்களுக்கும் இருக்க முடியாது.

உண்மைப்பொருள் அறியாத ஆத்திகவாதியைவிட, கடவுள் இல்லை என்று சொல்லும் நாத்திகவாதியே மேலானவர் ஆவார். காரணம் அவர்களால் நாட்டிற்கு கேடில்லை. ஆனால் உண்மைப்பொருள் அறியாத ஆத்திகவாதிகளோ பொதுமக்களிடம் கடவுளின் பெயரால் பல சடங்குகளைச் செய்யச் சொல்வார்கள். அதனால் எந்தப்பயனும் மக்கள் அடைய முடியாது. மக்கள் பெரும்பயன் அடைய வேண்டுமென்றால், பசியாற்றுவித்தல், உண்மைக் கடவுளான அகத்தீசரை பூஜித்தல் ஆகிய செயல்களே மக்கள் முன்னேற்றமடைவதற்கு துணையாக இருக்கும்.

# குருபகவானின் ஆசிபெற

உலகத்தில் ஆண்டுக்கு ஒருமுறை குருபகவான் பெயர்ச்சி அடைவார். நம்மைவிட்டு குருபகவான் நீங்காது இருக்கவேண்டும் என்றால் நாம் தினமும் காலை, மாலை 10 நிமிடம் வெண்ணிறத்துணியில் அமர்ந்து, குருபகவானாகிய அகத்திய முனிவரை "**ஓம் அகத்தீசாய நம**" என்று நாமஜெபம் செய்து வந்தால் நாம் பலகோடி ஜென்மங்களில் செய்த பாவங்கள் நீங்கும். பாவங்கள் நீங்கினால் சிறப்பறிவு உண்டாகும். மேலும் வியாபாரம், விவசாயம், தொழில், உத்தியோகம் ஆகியவை சிறப்பாக அமையும். மேலும் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். பண்புள்ள புத்திரபாக்கியம் தோன்றும். பகைமை நீங்கி தகுதியுள்ள நட்பு உண்டாகும். நம்மிடம் உள்ள குடிப்பழக்கம் மற்றும் சூதாடும் பழக்கம் நீங்கும். மேலும் மாமிசம் உண்ணுவதால் ஜீவதயவு இல்லாது போய்விடும். மூர்க்கத்தனமும் உண்டாகும்.

சிறுதெய்வங்களுக்கு ஆடு, கோழி மற்றும் உயிர்களை வெட்டி கொல்லுவதால் நமது முன்னோர்கள் செய்த புண்ணியமும் போய்விடும். நாம் செய்த புண்ணியமும் போய்விடும். உயிர் கொலை செய்ய செய்ய பொல்லாத வறுமை சூழ்ந்துவிடும். கொடிய புற்றுநோய், பக்கவாதம், தீராத வயிற்றுவலி, வலிப்பு நோய் போன்ற நோய்கள் சூழ்ந்துவிடும்.

மேலும் குடும்பத்தில் அடிக்கடி விபத்து ஏற்படும். தீராத பகை உண்டாகும். மனஅமைதி கெட்டுவிடும். உயிர்பலி கொடுத்து பாவங்கள் செய்ய செய்ய அறிவு மங்கிவிடும். அறிவு மங்கிவிட்டால் எது நன்மை? எது தீமை? என்று புரியாது. கணவன் மீது மனைவி சந்தேகப்படுவதும், மனைவிமீது கணவன் சந்தேகப்படுவதும், தகுதியுள்ள நண்பர்கள் மீது சந்தேகப்படுவதும், நமக்கு துன்பம் வந்தால் அண்ணன் தம்பி செய்வினை செய்துவிட்டான் என்றும் நண்பர்கள் செய்துவிட்டார்கள் என்றும் விண் கற்பனை செய்து பலபேரை பகைத்துக்கொள்வார்கள். நல்ல நட்பையும் இழந்துவிடுவார்கள். எதை தொட்டாலும் துலங்காது போய்விடும்.

மேற்கண்ட அனைத்து துன்பங்களும் நீங்கவேண்டுமென்றால் புலால் உண்ணுவதையும், உயிர்க்கொலை செய்வதையும் தவிர்க்க வேண்டும். மேலும் மாதம் இருவருக்காவது அன்னதானம் செய்யவேண்டும். மேலும் காலை, மாலை பூஜை செய்யவேண்டும். அன்னதானம் செய்தும், பூஜைசெய்தும் வந்தால் முன் செய்த பாவங்கள் நீங்கும். பாவங்கள் நீங்கினால் அறியாமை நீங்கி சிறப்பறிவு உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களைப்பற்றி புரிந்துகொள்ளுதலும், நண்பர்களைப்பற்றியும் புரிந்துகொள்ளுவும் முடியும். மேலும் எந்த வியாபாரம் செய்தால் லாபம் உண்டாகுமோ அவர்கள் அதை அறிந்து செய்வார்கள். புண்ணியமும் அருள்பலமும் மென்மேலும் உண்டானால், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். மேலும் எல்லா நன்மைகளும் உண்டாகும். ஞானமும் கைகூடும்.

## குறிப்பு

தினமும் ஆசான் அகத்தீசனை பூஜை செய்து வந்தால் சோம்பல் இருக்காது. எதிலும் உற்சாகமாக கடமையைச் செய்வார்கள். "தலைவன் யார்?" என்று அறிந்துகொள்ள முடியும். தலைவனை அறிந்து கொண்டவர்கள் தன்னைப்பற்றியும் அறிவார்கள். தன்னைப்பற்றி அறிகிறவர்கள் தமக்கு கேடுகள் செய்யும் மும்மலத்தையும் அறிந்துகொள்வார்கள். மும்மலத்தை அறிந்து கொண்டவர்கள் மும்மலத்தை நீக்கி, நின்மலம் ஆவார்கள். அவர்களே நிறைவுடையவர்கள் ஆவார்கள்.

இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பிலுள்ள 131 மகான்களின் நாமமும், அறிவுரைகளும் பின்பற்றி நடக்க வேண்டுமென்றால், படிப்பதால் மட்டும் முடியாது. ஆசான் அகத்தீசரை தினமும் உள்ளம் உருகி தியானம் செய்தால்தான் இந்த நூலிலுள்ள கருத்துக்களைப் பின்பற்றவும் ஜென்மத்தைக் கடைத்தேற்றவும் முடியும். வெறும் நூலறிவு மட்டும் ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாததுபோல் பயனற்றதாகிவிடும்

சித்தர்கள் போற்றித் தொகுப்பாகிய இந்த அரியநூலில் முற்றுபெற முனிவர்கள் 131 மகான்களின் நாமங்களை வரிசைப்படுத்தி தொகுத்துள்ளோம். அன்பர்கள் இந்த நூலை தினமும் பயபக்தியோடு தொட்டு வணங்கி பூஜித்து போற்றி வந்தால் எல்லா நலமும் பெற்று இன்புற்று வாழ்வார்கள் என்பது சத்தியம்.

**ஆசான் அகத்தீசனை பூஜை செய்வோம்!**
**ஆசிபெற்று வாழ்வோம்!!**

மகத்துவம் பொருந்திய மகானும் மாமேருவெனத் திகழும் மாமுனிவர் அகத்தீசரை தினமும் சலிப்பில்லாமல் பூஜித்து வந்தால் நாம் அறியாமையால் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கி, நாம் மேற்கொள்ளும் அனைத்து செயல்களும் சித்திபெறும். மேலும், இல்லறமும் சிறக்கும், ஞானமும் கைகூடும் என்பது சத்தியம். இந்தநூல சிறிய நூல் என்றாலும் மதிப்பிற்குரிய நூலாகும். இது வீட்டில் இருப்பது கடவுள் இருப்பதாக எண்ணவேண்டும்.

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,**
"ஓங்காரக்குடில்"
115, நகர் விரிவாக்கம், துறையூர் 621 010.

| | |
|---|---|
| **குருநாதர்** | **– 455684 (STD Code 04327)** |
| அலுவலகம் | – 455184/384 |
| ஃபேக்ஸ் | – 455284 |
| குடிநீர் அலுவலகம் | – 455884 |
| பெருமாள்மலை அடிவாரம் | – 423484 |